Perbadanan Bekalan Air Pulau Pinang Sdn Bhd
199901001061 (475961-X)
Memenuhi segala keperluan bekalan air anda
*Meeting all your water supply needs*

24.7.2026
**ஊடக வெளியீடு**

**DATO' IR. PATHMANATHAN K.**
CEO, PBAHB and PBAPP.

**2027 முதல் செபராங் பிறையில் கூடுதலாக 80 MLD நீர் விநியோகம்**

- **சுங்கை கிரியான் நீராதாரத்தைப் பயன்படுத்தும் புதிய BOT நீர் சுத்திகரிப்பு நிலையம் 2027ஆம் ஆண்டு மத்தியில் செயல்பாட்டிற்கு வரும்.**
- **இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் கிடைக்கும் கூடுதல் சுத்திகரிக்கப்பட்ட நீர், தெற்கு செபராங் பிறை (SPS) மற்றும் மத்திய செபராங் பிறை (SPT) பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் இடங்களுக்கு விநியோகிக்கப்படும்.**

பினாங்கு, வெள்ளிக்கிழமை, 24.7.2026: PBAPP, 2027ஆம் ஆண்டு மத்தியில் தெற்கு செபராங் பிறையில் (SPS) நாளொன்றுக்கு 80 மில்லியன் லிட்டர் (MLD) சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்யும் புதிய நீர் சுத்திகரிப்பு நிலையத்தை செயல்பாட்டிற்குக் கொண்டுவரவுள்ளது.

இது நாளொன்றுக்கு 80 MLD சுத்திகரிக்கப்பட்ட நீர் என்பது, ஒலிம்பிக் தரத்திலான சுமார் 35 நீச்சல் குளங்களை அல்லது 1.5 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுமார் 53.3 மில்லியன் பெரிய குடிநீர் பாட்டில்களை தினமும் நிரப்பக்கூடிய அளவாகும்.

இத்திட்டத்தில், ரிம216 மில்லியன் மதிப்பிலான இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தை (WTP) அமைக்கும் பணிகள், 'கட்டுதல்-இயக்குதல்-ஒப்படைத்தல்' (BOT) அடிப்படையில் மேற்கொள்ளப்படும். இதற்கான மூல நீர் ஆதாரமாக 'சுங்கை கிரியான்' ஆறு அமைகிறது; இந்த ஆறானது SPS பகுதியில் பினாங்கு மற்றும் பேராக் மாநிலங்களுக்கு இடையிலான இயற்கையான எல்லையாகத் திகழ்கிறது.

சுங்கை கிரியான் BOT நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான (WTP) அடிக்கல் நாட்டு விழாவை, பினாங்கு மாநில முதலமைச்சர் மேதகு சாவ் கொன் இயோவ் அவர்கள் **24.7.2026** அன்று தொடங்கி வைத்தார்.

பினாங்கில் 30 ஆண்டு கால BOT (கட்டுதல்-இயக்குதல்-ஒப்படைத்தல்) அடிப்படையில் அமைக்கப்படும் முதல் நீர் சுத்திகரிப்பு நிலையம் இதுவாகும். தற்போது, பினாங்கில் இயங்கி வரும் பத்து நீர் சுத்திகரிப்பு

நிலையங்களும் முழுமையாக PBAPP நிறுவனத்திற்குச் சொந்தமானவை மற்றும் அதன் நிர்வாகத்தின் கீழ் உள்ளன. எனினும், 11-வது நீர் சுத்திகரிப்பு நிலையமாக அமையவுள்ள இத்திட்டத்தை, PBAPP நிறுவனம் நியமித்துள்ள ஒப்பந்ததாரரான 'இன்யா வாட்டர் இன்ஜினியரிங் (எம்) சென். பெர்ஹாட்' (Inya) நிறுவனம் கட்டி, இயக்கி, அதன் உரிமையையும் 30 ஆண்டுகள் காலம் வைத்திருக்கும்.

Inya வழக்கமான ஆற்று நீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, நாளொன்றுக்கு 80 MLD சுத்திகரிக்கப்பட்ட நீரை உற்பத்தி செய்யும் வகையில் இந்த புதிய நிலையத்தைக் கட்டி இயக்குவதற்கான பொறுப்பை ஏற்க, Inya நிறுவனம் PBAPP-உடன் ஒப்பந்தம் செய்துள்ளது. 2057-ஆம் ஆண்டில் இந்த 30 ஆண்டுகால BOT ஒப்பந்தம் முடிவடையும் போது, 'Inya' நிறுவனம் இந்த 80 MLD நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் உரிமையை PBAPP-இடம் ஒப்படைக்கும்.

2027ஆம் ஆண்டு முதல், ஒரு கன மீட்டருக்கு ரிம0.98 என்ற தொடக்க விலையில் 'இன்யா' நிறுவனத்திடமிருந்து சுத்திகரிக்கப்பட்ட நீரை PBAPP கொள்முதல் செய்யும். இதில் நீர் எடுப்பு, சேமிப்பு, விநியோகம் மற்றும் பிற செலவுகள் சேர்க்கப்படாது.

அதன்பின்னர், குடியிருப்புப் பகுதிகள், வணிக வளாகங்கள், தொழிற்பேட்டைகள் மற்றும் புதிய 'பத்து காவான் தொழிற்பேட்டை 3' (BKIP3) உள்ளிட்ட SPS மற்றும் மத்திய செபராங் பிறையில் (SPT) அதிக நீர் தேவைப்படும் இடங்களுக்கு PBAPP இந்தச் சுத்திகரிக்கப்பட்ட நீரை விநியோகிக்கும்.

**முக்கிய நன்மைகள்**

80 MLD திறன் கொண்ட சுங்கை கிரியான் BOT நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் முக்கிய நன்மைகளைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்:

| | | |
|---|---|---|
| 1. | துரித செயலாக்கம் | 2027-ஆம் ஆண்டின் மத்தியில் SPS மற்றும் SPT-க்கு விநியோகிக்க, கூடுதலாக 80 MLD சுத்திகரிக்கப்பட்ட நீர் விநியோகத்தை உறுதிச் செய்தல். |
| 2. | SPS மற்றும் SPT பகுதிகளுக்கான நடுத்தர கால நீர் விநியோகத் தீர்வு | இந்த நீர் சுத்திகரிப்பு நிலையம் (WTP), 2030-களின் முற்பகுதி வரை SPS மற்றும் SPT பகுதிகளில் போதுமான மற்றும் நிலையான நீர் விநியோகத்தை உறுதிசெய்ய உதவும். |

| | | |
|---|---|---|
| | | **இது, பேராக்-பினாங்கு நீர் திட்டத்தை (P-PWP) செயல்படுத்துவதற்கும் மற்றும்/அல்லது கடல்நீரை நன்னீராக்கும் முக்கியத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் தேவையான கால அவகாசத்தை வழங்கும்.** |
| 3. | PBAPP-**க்கு பல மில்லியன் ரிங்கிட் மூலதனச் செலவு** (CAPEX) **பொறுப்பு ஏதுமில்லை** | **தினசரி** 80 **மில்லியன் லிட்டர்** (MLD) **திறன் கொண்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தை** (WTP) **அமைப்பதற்குத் தேவைப்படும் ரிம**216 **மில்லியன் அளவிலான மூலதனச் செலவுப் பொறுப்பை** PBAPP **ஏற்க வேண்டியதில்லை**. |
| 4. | PBAPP-**க்கு மாதாந்திர செயல்பாட்டுச் செலவு** (OPEX) **பொறுப்பு ஏதுமில்லை** | **பினாங்கு மாநிலத்தின்** 11-**வது நீர் சுத்திகரிப்பு நிலையத்தை** (WTP) **நிர்வகிக்கவும்**, **இயக்கவும் மற்றும் பராமரிக்கவும்** PBAPP-**க்கு எவ்வித கூடுதல் செயல்பாட்டுச் செலவும்** (OPEX) **ஏற்படாது**. |

**நன்றி.**

---


**எழுத்தாக்கம்** : Syarifah Nasywa bt Syed Feisal Barakbah
Corporate Communications Section

**மின்னஞ்சல்** : comms@pba.com.my